Arharan.S
MA MPHIL
14 Jul 2019

மொத்த மதிப்பெண்கள்: 100 பன்னிரண்டாம் வகுப்பு

அ) பலவுள் தெளிக:. (1x5=5)

1. “ *மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது*

*தன்னேர் இலாத தமிழ் ! “* இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்

அ) அடிமோனை , அடிஎதுகை ஆ)சீர்மோனை , சீர் எதுகை இ) அடி எதுகை , சீர் மோனை ஈ) சீர் எதுகை, அடி மோனை

2. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்.

அ) யாப்பருங்கலக் காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

3. மெய்யெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?

அ) 18 ஆ) 3 இ) 5 ஈ) 12

4. நரம்பக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது?

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளி ஈ) நீர் நிலைகள்

5. <u>பொய்யா வானம்</u> புதுப்பெயல் பொழிந்தன – அடிகோடிட்ட சொல்லின் இலக்கண குறிப்பு?

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர் ஆ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக :. (1x5=5)

6. வெள்ளப் சமவெளிகள் அழியாக் காரணம்___________

7. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்க சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை__________.

www.Padasalai.Net www.TrbTnpsc.com

8. உவா உற வந்து கூடும்

உடுபதி, இரவி ஒத்தார் – யார்?

9. தமிழில் திணைப்பாகுபாடு _______ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

10. *“நளிர் கடல்”*- என்பதன் பொருள்_________

இ) எவையெனும் 15 வினாக்களுக்கு விடையளிக்க:. (15x2=30)

11. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தை குறிப்பிடுக:.

12. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

13. “*பாடஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்*

*கடாஅ யானைக் கலிமான் பேக”* – இச் சங்க கவிதைகளின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றுக்கான இலக்கண குறிப்புகளையும் எடுத்து எழுதுக:.

14. விடியல், வனப்பு – இரு சொற்களையும் ஒருங்கிணைத்து தொடர் அமைக்க.

15. *‘ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்’* என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?

16. *'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது”* – விளக்கம் தருக.

17. இனநிரை – பிரித்து புணர்ச்சி விதி தருக.

18. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களை கடுமையாகச் சேதப்படுத்திய தன் விளைவை இன்று சந்தித்து கொண்டிருக்கிறானா – இரு தொடர்களாக்குக.

19. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு வரைக.

20. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார் ?

21. பிழை தவிர்க்கச் சில குறிப்புகள் தருக.

22. நிலையாமை குறித்து , சவரி உரைக்கும் கருத்து யாது?

23. *'துன்பு உள்ளது எனின் அன்றோ சுகம் உளது'* என்ற இராமனின் கூற்று எந்த பழமொழிக்கு பொருந்தும்

24. புணர்ச்சி விதி தருக:. அருங்காணம்

25. பொருள் வேற்றுமையணி என்றால் என்ன?

26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைக்க. *(தலை, தளை, தழை)*

27. வாகைத்திணை என்றால் என்ன?

ஈ) எவையெனும் 10 வினாக்களுக்கு விடையளிக்க:. (3x10=30)

28. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாடாகும் – விளக்குக.

29. ‘*எங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்*” இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

30. செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான் யெல்லாம் தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

31. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுஉல கால வகையி னானே<br><br>- நன்னூல் | மீண்டுமம்மந்தப் பழமைநலம் புதுக்கு தெற்கு மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா,வா!<br><br>- சிற்பி பாலசுப்பிரமணியம் |

32. '*நீர் நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து*

*உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள் – இக் கவிதையின் அடி*

'*தூங்குடம் பனிநீரை வாங்கும் கதிரோனே* என்னும் நாட்டுப்புற பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.

33. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை குறிப்பிடுக.

34. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பை தேடினர்?

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்குக.

36. “*வருபவர் எவராயினும்*

*நன்றி செலுத்து*” – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

37. சடாயுவைத் தந்தையாக ஏற்று , இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

38. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வை சுட்டிக் காட்டுக.

உ) எவையெனும் 6 வினாக்களுக்கு விடையளிக்க: (5x6=30)

39. பாரதியாரின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று,சமூகப் பற்று ஆகியவற்றை விவரிக்க.

40. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

41. புயல் தாக்கினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுத்து கிடக்கும் மின் இனைப்புகளை சரி செய்யக்கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளருக்கு கடிதம் எழுதுக.

42. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

43. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்க படுகிறது- எவ்வாறு? விளக்குக.

44. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் , பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையை பாடப்பகுதி வழி நிறுவுக.

45. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருனனையைச் சொல்லி வடிக்க.

---

Ariharan.S
MA MPHIL